# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:103** **தேதி:05.01.2012.**

**தனியாருக்கு தாராளம்.... BSNLக்கு பாரபட்சம்....**

## 2012 ஜனவரி 10ல் மதிய உணவு நேர ஆர்ப்பாட்டம்

**# BWA ஸ்பெக்ட்ரம் கட்டணத்தை BSNLக்கு திருப்பி கொடு**

**# தனியார் தொலைதொடர்பு நிறுவனங்களின் சட்ட விரோத ரோமிங்கை ரத்து செய்.**

BWA ஸ்பெக்ட்ரம் கட்டணத்தை BSNLக்கு திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் 3G உரிமம் பெறாத வட்டங்களிலும் தனியார் தொலைதொடர்பு நிறுவனங்கள் வழங்கிய சட்ட விரோத ரோமிங்கை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து 2012, ஜனவரி 10ஆம் தேதி மதிய உணவு நேரத்தில் அனைத்து தொலைபேசி நிலையங்கள்/ அலுவலகங்களிலும்/ மாவட்ட/ மாநில/ அகில இந்திய தலைநகரங்களிலும் மதிய உணவு நேர ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என BSNLல் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு அறைகூவல் விடுத்துள்ளது.

BWA ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் பங்கேற்க BSNL நிறுவனம் அனுமதிக்கப்படாதது மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து வட்டங்க(Circle)ளுக்குமாக ரூ.8,313 கோடி ரூபாய்களைBWA ஸ்பெக்ட்ரம் கட்டணமாக செலுத்த கட்டாயப்படுத்தப் பட்டது. ஆனால் தனியார் நிறுவனங்களுக்கு ஏலத்தில் பங்கேற்கவும், அவற்றின் விருப்பத்திற்கு ஏற்ப வட்டங்களை தேர்ந்தெடுக்கவும், அதற்கான கட்டணத்தை மட்டும் செலுத்தவும் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் BSNLக்கு வழங்கப்பட்ட BWA ஸ்பெக்ட்ரம் உயர் தொழில் நுட்பத்திற்கு ஏற்றதாக இல்லை; ஆனால் தனியார்களுக்கு உயர் தரமான ஸ்பெக்ட்ரம் வழங்கப்பட்டது. எனவே BSNL நிறுவனமும், கூட்டு நடவடிக்கைக் குழுவும் இந்த தரமற்ற தேவையில்லாத BWA ஸ்பெக்ட்ரத்தை திருப்பிக் கொடுக்கவும், அதற்கான பணத்தை BSNLக்கு திருப்பி கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர். தொலை தொடர்பு இலாகா கொள்கை பூர்வமாக இதற்கு ஒத்துக் கொண்டதாக தெரிய வந்தாலும், தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் மிகவும் அவசியமான பணத்தை திருப்பி கொடுக்க இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவைல்லை.

**இந்தப் பணம் உடனடியாக காலதாமதமின்றி தரப்பட வேண்டும்.**

பாரதி ஏர்டெல், வோடோபோன் மற்றும் ஐடியா போன்ற தனியார் நிறுவனங்கள் தாங்கள் உரிமம் பெறாத வட்டங்களில்(Circle) சட்ட விரோதமாக ரோமிங்க் வசதியை பயன்படுத்தி 3G சேவை கொடுத்ததை தொலைத்தொடர்பு இலாக மிகச்சரியாக ரத்து செய்தது. ஆனால் இந்த தனியார் நிறுவனங்கள் TDSAT என்ற ஆணையத்திடம் இது தொடர்பாக தாவா எழுப்பி உள்ளனர். BSNL நிறுவனத்தை ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்காமல், அனைத்து மாநிலங்களுக்குமான 3G ஸ்பெக்ட்ரத்திற்காக பெருந்தொகையான ரூ.10,186 கோடி ரூபாய்களை தொலைதொடர்பு இலாகாவிற்கு செலுத்த கட்டாயப்படுத்தப் பட்டது. சட்ட ரீதியான பரிசீலனை நடக்கும் என்றால் இந்த பாரபட்சம் எவ்வாறு சரியாகும். எனவே தொலைத்தொடர்பு இலாகாவின் சட்ட விரோதமாக ரோமிங்க் வசதியை பயன்படுத்தி வழங்கப்பட்ட 3G சேவைகளை ரத்து செய்வது என்ற முடிவு சரியானது தான். அது மேலும் கால தாமதமின்றி அமுல் படுத்த வேண்டும்.

மேற்கூறிய இரண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்து கிளை/மாவட்ட/மாநில/அகில இந்திய மட்டங்களில் 10.01.2012 அன்று மதிய உணவு நேர ஆர்ப்பாட்டங்களை வலுவாக நடத்திட வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

/S.செல்லப்பா/
மாநில செயலாளர்.